[21st September 1961

SRI V. K. KOTHANDARAMAN: நானும் அதைத்தான் கேட்கிறேன், கம்பவுண்டர்கள் கூட இல்லை. . . . . .

DEPUTY SPEAKER: That is not a supplementary question.

9-00 a.m. SRI R. SRINIVASA IYER: On a previous occasion the Hon. Minister said that establishment and appointment of doctors or compounders for rural dispensaries was the work of Panchayat Unions. Am I to take it that the Panchayat Unions are competent to establish rural dispensaries or where rural dispensaries have been established the Panchayat Unions have power to appoint personnel to man those dispensaries?

THE HON. SRI M. A. MANICKAVELU: The present idea is this. All these dispensaries were started by district boards. That work is being now taken up by Panchayat Union Councils. All dispensaries except those institutions having beds (those institutions having beds will go to Government) I mean those which are mere dispensaries will be the responsibility of Panchayat Union Councils.

SRI R. SRINIVASA IYER: I was concerned with the appointment of personnel to these dispensaries? Can the Panchayat Union Council itself do this?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, it is the concern of the Panchayat Union.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: ரூரல் மெடிக்கல் பிராக்டீஷனர்ஸ் என்றிருப்பவர்களை வைத்துக்கொண்டு கிராமங்களில் டிஸ்பென்சரிகள் நடத்திக்கொண்டிருப்பது வழக்கமாக இருந்து கொண்டிருந்தது. இப்போது கூடுதலாக பிரைமரி ஹெல்த் ஸெண்டர்ஸ் அதிகமாக ஆரம்பித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் பல இடங்களிலும் டாக்டர்கள் இல்லாமல் இவைகள் எல்லாம் எந்த விதமான வேலையும் செய்யாமல் இருக்கிறது. ஆகவே இவைகளை அபாலிஷ் பண்ணுகிற காரியத்தைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

TH HON. SRI M. A. MANICKAVELU: நாடு முழுவதிலும் பிரைமரி ஹெல்த் செண்டர் வரவேண்டும் என்றால் கொஞ்சம் நாளாகும். அதுவரையில் ரூரல் டிஸ்பென்ஸரியும் பிரயோசனமாயிருக்கும். பிரைமரி ஹெல்த் செண்டர் எல்லா இடங்களிலும் அமைத்த பின்னால் இவைகளை மூடுவதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

Small pox (Madras City)

* 1683 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether incidence of small-pox has increased of late in the City of Madras; and

(*b*) if so, the reason therefor; and the steps taken to prevent spread of the disease?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) From December 1960 to April 1961, there was an increase but since May 1961, the incidence has declined.

21st September 1961]

(b) The increase was probably due to the low vaccination status of the people and trend of the epidemic. A special scheme prepared by the Director of Public Health is being implemented by the Corporation with Government aid since March 1961.

SRI A. A. RASHEED : Since all the civilised countries of the world have eradicted this disease, may I know how long will it take for this Government to eradicate this disease at least in the City ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The scheme is now not only to eradicate it from the city but from the whole State. We tried a pilot scheme in Chingleput district. We are going to take two or three districts at a time. We expect that within three or four years, at any rate before the end of the Third Plan, we will be able to completely control or eradicate this disease.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்த வைசூர் நோயை ஒரு சில இடங்களில் மட்டும் தடுத்துவிடுவதால் நாடு பூராவுக்கும் நின்றுவிடாது. சீக்கிரத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு (க்யுக்-டிரான்ஸ்போர்ட்) பரவி விடும். ஆகவே எல்லா பள்ளிக்கூடங்களிலும் இருக்கின்ற குழந்தைகளுக்கு எல்லாம் ஒரே நேரத்தில் இந்த தடுப்பு முறையை பிரயோகிப்பதற்காக நாடு பூராவிலும் இருக்கின்ற எ. ரெஜிஸ்டரில் இருக்கின்ற ஆட்களையும் பி. ரெஜிஸ்டரில் இருக்கின்ற ஆட்களையும்—எல்லோரையும் உபயோகப்படுத்தி ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குள் இந்தத் தடுப்பு முறைகளை இம்ளிமெண்ட் பண்ணுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குழந்தைகளுக்கு மட்டும் இந்த தடுப்பு முறைகளை கொண்டுவந்தால் பிரயோசனமாய் இருக்காது. மொத்தம் ஒரு இடத்தில் 1,000 பேர் இருக்கின்றார்கள் என்றால் அதில் 800 பேர்களுக்கு இந்த தடுப்பு முறையை உபயோகித்துவிட்டால் இந்த நோய் பரவாது என்று சொல்லுகிறார்கள். செங்கல்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரையில் 19, 20 லட்சம் ஜனத் தொகையுள்ள இடத்தில் 16, 17 லட்சம் மக்களுக்கு அம்மைக் குத்தப்பட்டிருக்கிறது. இதை மாகாணம் பூராவுக்கு அமல் நடத்த வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். இதற்காக பெரிய அளவில் ஸ்கீம் ஒன்றையும் சர்க்கார் தயார் செய்திருக்கிறது.

Sanitary Inspectors

*1684 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of SRI S. M. ANNAMALAI). கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சம்பள கமிஷன் சிபாரிசுப்படி சானிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு சம்பளம் தரப்படுகிறதா ?

(இ) இல்லையாயின் காரணமென்ன ?

(உ) இப்போது பெறுகின்ற சம்பளமும் சம்பள கமிஷன் சிபாரிசு செய்த சம்பளமும் எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Sanitary Inspector employed under the District Boards and the Municipalities except the Shencottah Municipality, the municipalities in the Kanyakumari District and the Panchayats in the State, are paid their salary in the revised scale of pay recommended by the Pay Commission.